பக்கங்கள்:-19

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 26 | வெள்ளிக்கிழமை | 13.10.2023 | அதிர்வு 73 |
|---|---|---|---|---|---|

## யாழ்ப்பாணத்தில் பெண்ணின் சடலம்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கை ஒன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப் பட்டுள்ளது.

06▶

## பல்கலை தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் போராட்டம்




– எஸ்.நிதர்ஷன் –

பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய பல்கலைக்கழக ஒழுங்கமைப்பைப் பாதுகாத்தல், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், வரவு – செலவுத் திட்டத்தில்

06▶

# ஜெனிவாவில் புதிய பிரேரணை இலங்கை அரசுக்கு எதிராக வரும்

## பிரிட்டன் உறுதி என்று சித்தார்த்தன் தெரிவிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

**இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மீளவும் புதிய பிரேரணையைக் கொண்டு வருவதில் பிரிட்டன் உறுதியாக உள்ளது.**

**இந்தத் தகவலை புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**

04▶



# இலங்கை வந்த அமெ. அதிகாரியுடன் சுமந்திரன் நேற்று கொழும்பில் பேச்சு

இந்து சமுத்திர எல்லையோர நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கும் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் அவ்ரீன் அக்தர் நேற்று மாலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனைச் சந்தித்து நாட்டின் அரசியல் நிலைவரங்கள் குறித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்டார்.

சுமந்திரன் அண்மையில் வொஷிங்டன் சென்றிருந்தபோது இந்த அதிகாரியை அங்கு சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அதன் தொடர்ச்சியாகவே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.



## சுனில் ரத்நாயக்கவின் விடுதலைக்கு எதிரான மனுக்கள் விசாரணைக்கு ஏற்பு



யாழ்.தென்மராட்சி, மிருசுவிலில் 8 அப்பாவி பொதுமக்களைப் படுகொலை செய்து புதைத்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தின் ஸ்டாவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு

06▶




சேர்ந்தே இருப்பவை எவை என்றால் தமிழரசுக் கட்சியும் குழப்பமும் என்று இலகுவாகப் பதில் கூறி விட முடியும்.

நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரும் விடயத்தில், மற்றைய ஆறு தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து ஹர்த்தால் அனுஷ்டிக்கும் முடிவுக்கு தமிழரசுக் கட்சியும் வந்திருப்பதாகக் கூறப்படும் விடயம் தமிழரசுக்குள் முட்டு மோதல்களை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது.

03▶

# நியூசிலாந்தின் நாளைய தேர்தலில் ஈழத் தமிழ் வம்சாவளி வேட்பாளரும்





நியூசிலாந்து நாட்டின் தேர்தலில் தேசியக் கட்சி தேர்தலில் தேசியப் பட்டியலில் வேட்பாளராக ஓர் இலங்கைத் தமிழரும் போட்டியிடுகின்றார்.

நியூசிலாந்து நாட்டில் நாளை சனிக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் நியூசிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் பிரதிநிதித்துவபடுத்தும் ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க்கட்சியான தேசியக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது.

இந்த இரண்டு கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. இருப்பினும் சிறு கட்சிகள் துணை கொண்டு தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று அந்நாட்டில் வெளியான கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொதுத் தேர்தலில் தேசியக் கட்சி தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தனும் உள்ளார்.

இவர் இங்கிலாந்து, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் பாரிய கட்டுமாணப் திட்டங்களில் ஆலோசகராக பணியாற்றி உள்ளார். அத்துடன், நியூசிலாந்தில் பல்வேறு சமூகப் பணிகளிலும் அவர் ஈடுபட்டு உள்ளார். யாழ். பரியோவான் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரிகளின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டிஷ் அமைச்சருடன் நேற்று தமிழ் எம்.பிக்கள் யாழில் சந்திப்பு







யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ் வந்திருக்கும் பிரித்தானிய மைச்சர் ஆன் மேரி ரெவலியனுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று மாலை 7மணியளவில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்தன் ஆகியோரும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்கும் கலந்துகொண்டனர்.

# மகனைத் தேடிய தந்தை வவுனியாவில் உயிரிழப்பு



வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடிவந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா, மகாறம்பைக்குளம் ஸ்ரீராமபுரம் பகுதியை சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது 65) என்ற தந்தையே நேற்று மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார். அவரைத் தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் இவர் கலந்து கொண்டு தனது மகனை கண்டு பிடித்து தர போராடி வந்தார். இந்நிலையில் மகனைக் காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருச்சியில் இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட ஏழரைக் கிலோ தங்கம் இராமநாதபுரத்தில் சிக்கியது

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

திருச்சியில் இலங்கையில் கடத்தி வரப்பட்ட இந்தியப் பணத்தில் ரூ. 4.48 கோடி மதிப்பிலான ஏழரைக் கிலோ தங்கத்தை மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினால் பறிமுதல் செய்தனால் இது தொடர்பாக இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

ராமநாதபுரம் பகுதியிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு மர்ம நபர்கள் சிலர் காரில் தங்கம் கடத்துகின்றனர் என மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு (டி.ஆர்.ஐ.) அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சமயபுரம் அருகேயுள்ள சுங்கச்சாவடியில் முகாமிட்டிருந்த டி.ஆர்.ஐ. குழுவினர் அவ்வழியே செல்லும் கார்களை கண்காணித்து, குறிப்பிட்ட கார் வந்ததும் அதை நிறுத்திச் சோதனை செய்தனர்.

அப்போது காருக்குள் மூன்று பெட்டிகளில் 7,556 கிலோ கிராம் எடையுள்ள 45 தங்கக் கட்டிகள் இருந்தன. அவற்றின் மதிப்பு ரூ. 4.48 கோடி. இதையடுத்து அத்தங்கத்தை மீட்டு, காரில் வந்த இருவரையும் திருச்சி சுங்கத் துறை அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர்.

அந்த காரில் இருந்த முகமது இர்பான், அஜ்மல் கான் இருவரையும் அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தினர். தங்கக் கட்டிகளை சென்னையில் உள்ள நகை வியாபாரி ஒருவரிடம் கொடுக்க எடுத்துச் சென்றனர் எனஅவர்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணையில் அவர்கள், ராமநாதபுரம் மாவட்டம் தேவிப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தோர் என்பதும், இலங்கையிலிருந்து அக். 9 ஆம் தேதி தேவிப்பட்டினம் வந்த தங்கத்தை சென்னையில் உள்ள நகைக்கடை வியாபாரிகளுக்கு எடுத்துச் செல்ல அவர்கள் கூலிகளாக (குருவி) வேலை செய்தமையும் தெரியவந்தது.

இதையடுத்து இருவரையும் கைது செய்து, காரையும் பறிமுதல் செய்து அதிகாரிகள் விசாரிக்கின்றனர். அந்தத் தங்க கட்டிகளையும், அவர்கள் வந்த காரையும் மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னையில் உள்ள அந்த நகை வியாபாரி யார் என்பது குறித்தும், இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்கு தங்கக் கட்டிகள் எப்படி கொண்டு வரப்படுகின்றன, இதற்கு யார் உதவுகிறார்கள் என்பன குறித்தும் மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# சம்மாந்துறையில் ஆயுதங்கள் மீட்பு!



(அஸ்ஹர் ஆதம்)

சம்மாந்துறையில் உள்ள சிறீ பத்ர காளி அம்மன் ஆலயத்துக்குரிய காணி ஒன்றின் கிணற்றில் இருந்து ஆயுதத் தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறீ பத்ரகாளி அம்மன் கோவிலுக்கு சொந்தமான காணி ஒன்றில் உள்ள கிணற்றைச் சுத்திகரித்த போது ரி 56 ரக துப்பாக்கி ரவை கூடு இரண்டு, 261 தோட்டாக்கள், ட்ஆபு துப்பாக்கி தோட்டாக்கள் 57, 0.22 துப்பாக்கிக்குரிய வெற்று தோட்டாக்கள் 46 அதற்குரிய தோட்டாக்கள் 3,எம் 16 துப்பாக்கிகுரிய தோட்டாக்கள் 11,சுடர் துப்பாக்கி (குடியசந புரவி) ஒன்று என்பன கிணற்றினுள் இருந்து மீட்டுள்ளன என சம்மாந்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கோவில் பராமரிப்பாளர் சம்மாந்துறைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய இந்தப் பொருள்களை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் மாவையும் அவரது பிரதிநிதியான அவரின் மகனுமே ஏனைய தமிழ்க் கட்சிகளுடனான கூட்டங்களில் தமிழரசு சார்பில் கலந்துகொண்டு ஹர்த்தால் முடிவுக்கு இணக்கம் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

ஆனால் இவ்விடயத்தில் கட்சிக்குள் கலாட்டாதான். தமிழரசு பிரமுகர்கள் இடையேயான 'வட்ஸ் அப்' குழுமத்தில் முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கும் முடிவை வாங்கு வாங்கென்று வாங்கியிருக்கின்றார்.

அன்றாடம் காய்ச்சிகளின் வயிற்றில் அடிக்கும் இந்த முடிவு, தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களின் தோல்வியின் பிரதிபலிப்பு என்ற சாரப்பட அரியநேத்திரன் நீட்டி முழக்கித் தெரிவித்திருக்கும் கருத்துக்களுடன் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தாம் முழுமையாக உடன்படுகிறார் என்று அந்த வாட்ஸ் அப் குழுமத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இது தொடர்பான முதலாவது கூட்டத்தில் நானும் பங்குபற்றினேன். அதில் கடையடைப்பு நடத்துவதில்லை என்றே தீர்மானிக்கப்பட்டது. அதனால்தான் மனித சங்கிலி போராட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. இப்போது எப்படி இந்த மாற்றம் வந்தது?" – என்ற சாரப்பட அந்தக் குழுமத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

ஆயினும், இந்த ஹர்த்தாலுக்கு முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுத் தருமாறு சித்தார்த்தன் தம்முடன் தொடர்பு கொண்டு கேட்டமையால், தாம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமைச் சந்தித்துப் பேசி, இதற்கான ஆதரவைப் பெற்றுக் கொடுத்தார் என்று பிறிதொரு போட்டியில் சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

எது, எப்படியோ ஹர்த்தால் நடத்தும் விவகாரம், அது நடந்து முடிந்த பின்னரும் தமிழரசுக்குள் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

\+ \+ \+

சைவப் பாடசாலைகளின் மாணவர்கள், சைவ நிகழ்வுகளில் அதிக ஈடுபாடு காட்டி, முழுமையாக மூழ்கி சைவ பாரம்பரியத்தில் நடந்து கொள்வது என்றால் அது ஒன்றில் குருபூசையாக இருக்கும் அல்லது நவராத்திரிப் பூசையாக இருக்கும்.

நவராத்திரியை ஒட்டி ஒன்பது நாள்களும் சைவப் பாடசாலைகளில் சைவ நிகழ்வுகள் பெரும்பாலும் கனகச்சிதமாக அரங்கேறும்.

இந்தமுறைஅவற்றைக்குழப்பும்விதத்தில் நவராத்திரி நாள்களில் இரண்டாம் தவணைப்பரீட்சையைநடத்தத்தீர்மானித்து விட்டார்கள் என்று தொலைபேசியில் மனம் வெதும்பிப் புளுங்கினார் சைவப் பிரமுகர் ஒருவர்.

"வடக்கின் ஆளுநர் கிறிஸ்தவர். கல்விச் செயலாளர் கிறிஸ்தவர். மாகாணக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தவர். அவர்களுக்கு இந்த நவராத்திரி கால விழுமியங்களின் ஆழம் புரியாது என்று மனதால் விசனித்தார் அந்த சைவப் பெரியார்.

நவராத்திரி தினங்களில் பரீட்சையை ஒரு மணி நேரம் தாமதித்து தொடங்குவது, அந்த ஒரு மணி நேரத்தில் சைவப் பாடசாலைகளின் மாணவர்களின் நவராத்திரி வழிபாடுகளை முடித்துக் கொள்வது என்ற கல்வி அதிகாரிகளின் சமாளிப்பு ஏற்பாடு பொருத்தமுடையதன்று என்பது அந்த அன்பரின் ஆதங்கம். மலையகத்தில் கூட இத்தகைய நெருக்கடி வந்த போது நவராத்திரியைத் தவிர்த்துப் பரீட்சைகளை நடத்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதை அந்த அன்பர் சுட்டிக்காட்டினார்.

மத விடயங்களை மிகத் தந்திரோபாயமாக கையாள வேண்டும். அந்த நுட்பம் – மதிநுட்பம் – நுணுக்கம் – அதிகாரிகளுக்கு கைவந்திருப்பது கட்டாயமானது.

# மருந்து முன்பதிவுகளையும் இடைநிறுத்த அறிவுறுத்தல்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

நாட்டில்மருந்துவிநியோகம்தொடர்பில், பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல முன்பதிவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், குறித்த முன்பதிகளை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அனைத்து விசாரணைகளும் நிறைவடையும் வரை, உடனடியாக அமுலாகும் வகையில் செலுத்தப்பட வேண்டிய சகல கொடுப்பனவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பணிப்புரை விடுத்துள்ளார்.

# 4 ஆண்டுகளுக்கு முன் ஹெரோயினுடன் கைதான ஈரானியர்கள் ஒன்பது பேருக்கு ஆயுள் தண்டனை!

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் 80 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட ஈரான் நாட்டு பிரஜைகள் 9 பேருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தமது கட்சிகாரர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை கைச்சாத்திட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய, சந்தேகநபர்களுக்கான தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவர்களை தங்களது சொந்த நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஜெனிவாவில் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரிட்டன் அமைச்சர் ஆன் மேரி ரெவலியனுக்கும் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலானசந்திப்புயாழ்ப்பாணத்திலுள்ளவிருந்தினர் விடுதியில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரிட்டன் அமைச்சருடன் அந்நாட்டு இலங்கைக்கான தூதுவர் அன்ரூ பற்றிக் கலந்துகொண்டிருந்ததுடன் தமிழ்க் கட்சிகளின் சார்பில் நாடாளுமன்றஉறுப்பினர்களானதர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறீதரன், சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் சித்தார்த்தன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில்,

"தமிழ் மக்களின் பல விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டன. அதிலும் தமிழ் மக்களின் நிலைமைகளை அறிந்துகொள்வதில் அவர்கள் ஆர்வம் காட்டியிருந்தார்கள். அதிலும் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆழமான அறிவும் அவர்களுக்கு இருக்கின்றது.

இதன்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அடுத்த முறையும் அதாவது மார்ச்சில் கொண்டு வரப்படுமா? கடந்த காலங்களில் பிரிட்டன் செயற்பட்டது போல் இனியும் அதற்கு முயற்சி எடுக்குமா? எனப் பிரிட்டன் அமைச்சரிடம் கேட்டிருந்தேன்.

அதற்கு அவர் மிகத் தெளிவாகவே தங்களுடைய பதிலைச் சொல்லியிருந்தார். அதாவது இதற்கான முயற்சியை நிச்சயமாகத் தாங்கள் எடுப்பதாக அவர் சொன்னார். ஆனால், இன்னும் நீண்ட காலம் இருக்கின்றது என்றும், இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றது என்றும், உறுப்பு நாடுகள் என்ன செய்வார்கள் எனப் பார்க்க வேண்டும் என்றும், இனித்தான் அவர்களுடன் பேச வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

அதேநேரத்தில் அந்த நாடுகளும் தாம் எடுக்கின்ற இந்த முயற்சிக்குச் சாதகமாகத்தான் இருப்பார்கள் என்று நம்புவதாகவும், அந்த முயற்சிகளை எடுப்பதாகவும் எங்களிடம் கூறியிருந்தார்.

ஆனாலும், அதனால் பிரயோசனம் இருக்கா என்றும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருந்தபோது, நான் சொன்னேன் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் அதனால் எந்தவொரு நன்மையும் ஏற்படாவிட்டாலும் அது ஒரு பேசு பொருளாக ஒரு உயர் சபையிலே இருப்பது மிக முக்கியமானது.

அது தொடர்ந்தும் பேசு பொருளாக இருக்கின்றபோது என்றோ ஒருநாள் அதன் அடுத்த கட்டத்துக்குப் போகக் கூடியதாக இருக்கும். ஆகவே, நீங்கள் புதிய தீர்மானத்தைக் கட்டாயமாகக் கொண்டு வரவேண்டும் என்று கூறியிருந்தேன்.

இதனை நிச்சயம் செய்ய வேண்டுமென நாங்கள் மூன்று பேருமாக அவரிடம் கேட்டுக்கொண்டோம்.

அதேபோன்று இந்த நாட்டில் இருக்கக் கூடிய பல பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இருவரிடமும் எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

குறிப்பாகக் காணிப் பிரச்சினைகள், இராணுவத்தால் ஏற்படுகின்ற பிரச்சினைகள், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விவகாரம் உள்ளிட்டவற்றை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தோம்.

அதனை அவர்கள் மிக ஆர்வமாகக் கேட்டறிந்தார்கள். அதேநேரம் பல விடயங்களை அவர்கள் அறிந்திருந்தாலும் எங்களிடம் இன்னும் கேட்டு ஆழமாக அறிந்து கொண்டார்கள்.

ஏனென்றால் எங்களது நிலைமைகளை அறிந்துகொள்வதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளில் தொடர்ந்தும் அவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வார்கள் என்று நம்புகின்றேன்." – என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் என்ன என்ன என்பது தொடர்பில் எங்களிடத்தே கேட்டிருந்தபோது அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் நாங்கள் எடுத்துக் கூறியிருந்தோம். ஆனாலும், எங்களுடைய பலவிதமான பிரச்சினைகள் பற்றியும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதேநேரத்தில் எத்தளவுக்கு இவற்றுக்கு அப்பால் சென்று இரண்டு இனங்களையும் என்ன விதமாகச் சேர்த்து வைக்கலாம் என்பதற்கான வழிமுறைகள் இருக்கின்றதா என்பதைப் பற்றி ஆராய்ந்தார்கள்.

இதைப் பற்றி பல விடயங்களைப் பேசியதுடன் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் கேட்டிருந்தனர். இதுவரை காலமும் வடக்கு மாகாணத்திலே பொருளாதார ரீதியாக எங்களுடைய தேவை என்ன என்பது சம்பந்தமாக போதுமான ஆராய்ச்சி செய்து அறிக்கை பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

இது சம்பந்தமாக கடந்த 2003ஆம் ஆண்டிலே அவர்கள் ஒன்று தொடங்கினார்கள். அதன் பின்பு என்னுடைய காலத்திலே நான் கேட்டுத் தொடங்கினார்கள். ஆனால், அதை அவர்கள் முடிக்கவில்லை.

ஆகவே, எங்களுடைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களுக்கான தேவைகள் என்ன அதாவது போரின் பின்னர் எங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களால் ஏற்பட்டுள்ள தேவைகள் என்ன என்பது சம்பந்தமாக போதுமான அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

மேலும் எங்களது அரசியல் ரீதியான பிரச்சினைகள தொடர்பில் கேட்டபோதும் போதுமான அளவு நாங்கள் எல்லோருமே அதனை எடுத்துக் கூறியிருந்தோம்.

குறிப்பாக அரசினுடைய முகத்தில் தற்போது சற்று வித்தியாசம் இருப்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆனாலும் வருங்காலத்தில் இவை மாற்றமடையக் கூடும் என்ற ஒரு கருத்தை எங்களிடத்தே அவர்கள் முன்வைத்தார்கள்.

ஆகவே அதிலிருந்து அவர்களும் தங்களால் இயலுமான வரையில் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்கலாம் மற்றும் அரசு எவ்வாறு தன்னுடைய நிலைப்பாட்டை மாற்ற முடியும் என்பது சம்பந்தமாக அவர்களுடைய பேச்சிலிருந்து எங்களால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது." – என்றார்.

# இஸ்ரேலில் வாழ்கின்ற இலங்கையர்களுக்கு தேவையான உதவியை வழங்க விசேட திட்டம்




இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக் கும் இடையில் நிலவும் கடுமையான மோதல்களைக் கருத்தில் கொண்டு இஸ்ரேலில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, இஸ்ரேலில் வாழும் இலங்கைமக்களின்தேவைகள்தொடர்பில் அதிகபட்ச தலையீட்டை வழங்குவதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் இணைந்து விசேட வேலைத்திட்ட மொன்றை நடைமுறைப்படுத்தியுள் ளன.

இஸ்ரேலில் பணிபுரியும் அல்லது வேறு காரணங்களுக்காக தங்கியிருக் கும் இலங்கையர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின் அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் சிரமங்கள் இருப்பின், இலங்கை அதிகாரிகளுக்கு நேரடியாகத் அறிவிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, தொலைபேசி எண் (+94) 117966396 வட்ஸ்அப் எண் (+94) 767463391 அல்லது [email protected] என்ற மின்னஞ்சல் மூலம் தேவையான தகவல்களை அறிய முடியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிவரவு குடியகல்வு நடைமுறைகள் மற்றும் வேறு எந்த முறையின் கீழும் இஸ்ரேலில் தங்கியுள்ள எந்தவொரு இலங்கையருக்கும் இந்த சேவையைப் பெற முடியும் என அரசாங் கம் அறிவித்துள்ளது.

# யாழ்.பல்கலை ஊழியர் சங்கத்தினர் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

பல்கலைக்கழகப் பணியாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித் தும் தீர்வு வேண்டியும் கவனவீர்ப்புப் போராட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நேற்று இடம்பெற்றது. அந்தவகை யில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முன்றிலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் போராட்டம் மேற்கொள் ளப்பட்டது.

இதன்போது பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து யாழப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வவுனியா பல்கலையிலும் போராட்டம்



– கே.வசந்தரூபன் –

வவுனியா பல்கலைக்கழகத்துக்கு முன்பாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்க சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கக் கூட்டுக்குழு ஆகியவற்றின் தீர்மானத்துக் மைவாக அனைத்துப் பல்கலைக்கழ கங்களிலும் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில் நேற்று வவுனியா பல்கலைக்கழகத்திலும் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா, பம்பைமடுவில் அமைந் துள்ள பல்கலைக்கழகத்தின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

“தேசிய பல்கலைக்கழக அமைப்பைப் பாதுகாக்க பல்கலைக்கழக கல்விசாரா பணியிடங்களை உடனடியாக நிரப்பு’ உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப் பட்ட சுலோக அட்டைகளைப் போராட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

பல்கலைக்கழகப் பணியாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசின் காலம் தாழ்த்தும் செயற்பாடு களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தீர்வை வேண்டியுமே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

# புலிகள் புதைத்தவற்றைத் தேடி வவுனியாவில் அகழ்வு நடவடிக்கை




யுத்த காலத்தில், வவுனியா புதிய கோவில்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்தனர் எனச் சந்தேகிக்கப்படும் பல இடங்களில் பொலிஸார் நேற்று வவுனியா நீதிவான் வசீம் அஹமட் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

தனியார் காணியில் ஆயுதங்கள் மற்றும் தங்கம் புதைக்கப்பட்டன எனச் சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இறுதி யுத்தத்தின் போது இந்தக் காணி அமைந்துள்ள இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாம் இருந்ததாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர், பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை ஆய்வக அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார் இணைந்து அகழ்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டு பக்ஹோ இயந்திரங்களின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையுமோ கண்டுபிடிக்க முடியவில்லை.

தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் வாசிம் அகமது உத்தரவிட்டார்.

அந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு தொடர்பான விரிவான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பூவரசங்குளம் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். பூவரசங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் மாவீரன் விக்டருக்கு உணர்வுபூர்வமாக நினைவேந்தல்




(மன்னார் நிருபர்)

ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் மன்னார் மண் பெற்றெடுத்த மகத்தான மாவீரன் லெப்.கேணல் விக்டரின் 37 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்றைய தினம் வியாழக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று மாலை 5 மணியளவில் லெப்.கேணல் விக்ரரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், நகரசபை, பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் கிளை உறுப்பினர்கள் உட்பட பலரும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.

## பல்கலை தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை 40 வீதத்தால் அதிகரித்தல், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதிக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை மீண்டும் செலுத்துதல், கல்விசார ஊழியர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக நுழைவாயிலில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பினரும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பினரும் நேற்று பல கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## சுனில் ரத்நாயக்கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்க உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் மாற்றுக் கொள்கைக்கான மையம், அம்பிகா சற்குணநாதன் ஆகியோர் தாக்கல் செய்த மூன்று மனுக்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டார்.

மற்றைய இருமனுக்களின் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெவ்ரி அழகரட்ணம், தினேஷ் தி ஹேவமான ஆகியோர் முன்னிலையாகினர்.

இந்த மனுக்கள் நீதியரசர்கள் விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புளி, அர்ஜுன ஒபயசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுக்களை விசாரணைக்கு ஏற்க அனுமதிக்கும் உத்தரவை வழங்கிய நீதியரசர்கள், வழக்கு விசாரணையை அடுத்த ஆண்டு மே 17ஆம் திகதி நடத்த முடிவு செய்தனர்.

## யாழ்ப்பாணத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

5 அடி உயரம், பொது நிறம், நீல நிறச் சட்டை, மண்ணிறச் சேலை அணிந்த, நரை முடியுடைய பெண்ணின் சடலத்தை அடையாளம் காட்டுமாறு கோரப்பட்டுள்ளது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதியின் சீத்துவம்

அனைத்துப் பிரஜைகளுக்கும் நீதி ஒரே மாதிரியாகவும், தாமதமின்றியும் கிட்ட வேண்டும். இது நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பொது மன்னிப்பு அளித்து விடுவித்த இரண்டு முக்கிய நபர்கள் குறித்த வழக்குகள் இலங்கையின் நீதித்துறையின் சீத்துவத்தை பறைசாற்றப் போதுமானவை.

முதலாவது நபர் அரசியல்வாதியான துமிந்த சில்வா. 2011 உள்ளூராட்சித் தேர்தல் சமயம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் அவரின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பியான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா சுட்டுக் கொல்லப்பட்டார். எம்.பியான துமிந்த சில்வா படுகாயமடைந்தார்.

பின்னர் நடைபெற்ற 'ட்ரயல் அட் பார்' வழக்கில் துமிந்த சில்வா மற்றும் அவரது சகபாடிகள் நால்வருக்கு 2016 செப்டம்பர் 8ஆம் திகதி மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கு எதிரான மேன்முறையீட்டை ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றம் ஏகமனதாக நிராகரித்தது.

ஆனால் 2021 ஜூன் 24ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபயவின் விசேட பொது மன்னிப்பின் கீழ் அவர் விடுதலையானார். அதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம், உடனடியாக அவரை மீள கைது செய்ய 2022 மே 30ஆம் திகதி உத்தரவிட்டது. இப்போது அவர் உள்ளே. அவரது பொது மன்னிப்பு விடுதலைக்கு எதிரான மனுவின் மீதான விசாரணையும் முடிந்து விட்டது. இனித் தீர்ப்பு எந்நேரமும் வரலாம்.

மற்றைய நபர் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயக்கா. 2000 டிசம்பரில் மிருசுவிலில் 5,13, 15 வயதுடைய மூன்று சிறார்கள் உட்பட 8 பேரை சித்திரவதை செய்து, கொன்று புதைத்த வழக்கில் 'ட்ரயல் அட் பார்' அவருக்கும் மரண தண்டனை விதித்தது. அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டையும் ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் 2019 இல் தள்ளுபடி செய்தது. ஆனால் அடுத்த ஆண்டில் - 2020 மார்ச்சில் - அவருக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுவித்தார் ஜனாதிபதி கோட்டாபய.

இந்த இரண்டு பொது மன்னிப்புக்களையும் ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. முதலில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போது தான் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படும் கட்டத்தை அடைந்திருக்கிறது. இன்னும் 7 மாதம் தாண்டித் தான் முதல் விசாரணைக்குத் திகதியிடப்பட்டுள்ளது. மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட சுனில் ரத்னாயக்கா வெளியில் சுதந்திரமாக உள்ளார்.

ஆனால் துமிந்த சில்வா பொது மன்னிப்பில் வெளியே வந்து ஒரு வருடத்துக்குள் மீளக் கைது செய்யப்பட்டு உள்ளே வைக்கப்பட்டுள்ளார். முந்தித் தாக்கல் செய்யப்பட்ட ரத்னாயக்காவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு ஏற்க முன்னரே, பிந்தித் தாக்கல் செய்யப்பட்ட துமிந்தவிற்கு எதிரான வழக்கின் விசாரணை முடிந்து தீர்ப்பும் வரவிருக்கின்றது.

பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட இரண்டு மரண தண்டனை கைதிகள் விடயத்தில் உயர் நீதிமன்றத்தில் நியாயம் கிட்டும் விவகாரத்தில் காணப்படும் இழுபறியும், முரண்பாடு நிலையும் இலங்கையின் நீதித்துறை சீத்துவத்தை வெளிப்படுத்தும் நல்ல அளவீடுதான்.

## விவசாயிகளுக்கு உரம் வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை



இம்முறை பெரும்போகத்தில், 3 மாவட்டங்களில் மரக்கறி மற்றும் ஏனைய பயிர்களை செய்கை பண்ணும் 3,000 விவசாயிகளுக்கு உரங்களை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கிணங்க, விவசாயி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவி தனியார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் மாத்தளை, குருணாகல், மொனராகலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளது.

ஒரு ஹெக்டெயருக்கு குறைவான நிலத்தில் காய்கறிகள் மற்றும் பிற பயிர்களை செய்கையிடும் விவசாயிகளுக்கே இவ்வாறு உரம் வழங்கப்படவுள்ளது.

## கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்க கப்பல் வருகை



அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

டீசரளெறஉடம எனப்படும் இந்த கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நாட்டில் நங்கூரமிட்டிருக்குமென கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் 24 பேர் வருகை தந்துள்ளனர். அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்களுக்கும் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

## இளம் குடும்பப் பெண் காய்ச்சலினால் மரணம்



காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வாடி ஒழுங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த - ஒரு பிள்ளையின் தாயானா சி.கேனுசா (வயது- 24) என்பவர் ஆவார்.

கடந்த ஆறாம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர், வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் 10 ஆம் திகதி காலை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பிற்பகல் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன் கிழமை உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு மாநகரை மையமாகக் கொண்டு தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகம் உதயம்!



"தமிழ் சமுதாயத்தில், எஞ்சியுள்ள இன்றைய மிகப்பெரிய பலம் கல்வி ஆகும் என்பதை எமக்கு என்றுமில்லாதவாறு உணர்த்தும் காலம் இது வாகும். ஆகவே, தமிழர் கல்வித் துறையைப் போற்றி பாதுகாத்து, பலவீனமான புள்ளிகளை அடையாளம் கண்டு, கூட்டிணைந்து நாம் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்நோக்கில், தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல் மூன்றாம் நிலை கல்வி வரையிலான ஒட்டுமொத்த தமிழர் கல்வி கட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுக்க இன்று நாம் அங்குரார்ப்பணம் செய்துள்ள தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகம், கல்வியிலாளர் முன்னாள் அதிபர் ப.பரமேஸ்வரன் தலைமையில் முழு வீச்சுடன் செயற்படும் என நாம் திடமாக நம்புகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள, தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் போசகராக மனோ கணேசனும், தலைவராக ப.பரமேஸ்வரனும், திருமதி. கே. நிரஞ்சன் செயலாளராகவும், நிதி செயலாளராக எம். ஜெயப்பிரகாஷம் நியமிக்கப்பட்டார்கள். ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் விரைவில் அறிவிக்கப் படவுள்ளன. பேராசிரியர் டி. தனராஜ், தொழிட்நுட்ப அமைச்சு பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் மற்றும் கல்வி அமைச்சின் முன்னாள் செயற்றிட்ட அதிகாரி க.பத்மநாதன், தொழிட்நுட்பக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.குருமூர்த்தி ஆகியோர் உட்பட பெருந் தொகையானோர் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

"தேசிய, மாகாணசபை மற்றும் தனியார் கல்வி கட்டமைப்பில் தமிழர் கல்விக்கான சமத்துவ வாய்ப்புகள் இன்மை, ஆளணி, பௌதிக வளம், அதிபர் தராதரங்கள், விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழிட்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கான தமிழ் மொழி ஆசிரியர்களின் கடும் பற்றாக்குறை, தமிழ் மாணவர்களின் இடை விலகல், தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்புகளில் தமிழ் மாணவர்களின் ஆர்வமின்மை, மூன்றாம் நிலை கல்வி, மேற்கல்வி, இடைநிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றுக்கான பாடசாலை மட்டத்திலான கல்வி வழிகாட்டல், தமிழ் மொழியிலான முன்பள்ளி கல்வி, பொது கல்வித்துறை தரவுகளைச் சேகரித்தல், முறைப்பாடுகளை ஒருமுகப்படுத்தி தீர்வு தேடல் ஆகிய விடயங்களை, நாம் இன்றைய இந்த முதல் சந்திப்பிலேயே ஆராய ஆரம்பித்துள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது.

அதிபர் நண்பர் பரமேஸ்வரன் கல்வி வளர்ச்சித்துறைக்கு தகைமையானவர் என்ற காரணத்தாலேயே, சிலகாலமாக அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வந்தேன். நானும், அவரும் கலந்து பேசி கண்ட கனவு இன்று நனவாகின்றது.



பரமேஸ்வரனுடன் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்கிறீர்கள். எமது நோக்கங்களை சிறப்பாக நண்பர் பரமேஸ்வரன் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்று இங்கே தவிர்க்க முடியாமல் வருகை தர முடியாத பேராசிரியர் மூக்கையா, பேராசிரியர் கலாநிதி. கணேசமூர்த்தி, பேராசிரியர் சந்திரபோஸ், பேராசிரியர் யோகராஜா, திரு எஸ். தில்லைநடராஜா உட்பட மிகப் பல கல்வியியலாளர்கள், ஆர்வலர்கள், தமது ஒத்துழைப்புகளை நல்குவதாக செய்தி அனுப்பியுள்ளனர். இவை எல்லாம் மகிழ்வையும், நம்பிக்கையையும் தருகின்றன.

தமிழர்களாகிய நாம் எமக்கிடையேயான தனிப்பட்ட முரண்பாடுகளை தள்ளி வைத்து விட்டு, எமது அனைத்து வளங்களையும் ஒன்று திரட்டி பணியாற்ற வேண்டிய காலம் இதுவாகும். அந்த பணி வரிசையில் கல்விப்பணி, முதல் மூன்று, முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற வேண்டும் என்பது எனது நிலைப்பாடு.

நமது நாட்டு அரசாங்கம் செயற்படும் கொழும்பை மையமாகக் கொண்டு தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகம் செயற்பட்டாலும், கழகத்தின் வீச்சு முழுநாட்டினதும் தமிழர் கல்வி கட்டமைப்பை தழுவியதாக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்.

ஆகவே, இந்தக் கழக வலையமைப்பு இன்னமும் விரிவு படுத்தப்பட வேண்டும் என நான் முன்மொழிகின்றேன். மக்கள் பிரதிநிதியாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்படும் கல்வி விவகாரங்களுக்கு நாடாளுமன்றம், அமைச்சு கலந்துரையாடல்கள், மாகாண சபை, வலயம், கோட்டம் உள்ளிட்ட தேசிய, மாகாண கல்வி கட்டமைப்புகளின் ஊடாகத் தீர்வுகளைத் தேடித் தர நான் கடமைப்பட்டுள்ளேன்." – என்றார்.

# உதயநிதி ஸ்டார் என்பதால் அவரது துறையும் ‘ஸ்டார்’!

## - முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்




சீனாவில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழக வீரர்கள் அதிக பதக்கங்களை வென்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த பதக்கங்களில் 28 பதக்கங்கள் தமிழ்நாட்டில் இருந்து பெற்றுள்ளோம் என ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற தமிழ்நாடு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சீனாவில் நடைபெற்ற 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழகத்தைச் சார்ந்த வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், சீனாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய விளையாட்டு வீரர்கள் பல்வேறு பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அதிக பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியா மொத்தமாக வென்ற 107 பதக்கங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் மட்டும் 28 பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்திய அளவில் பார்த்தால் நமது மாநிலம் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது. பதக்கங்கள் வென்ற 20 விளையாட்டு வீரர்களுக்கு 9 கோடியே 40 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை பரிசுகள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி. இந்தியா மற்றும் உலகளாவிய போட்டிகளில் தொடர்ந்து உங்களது பங்களிப்பை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். தொடர்ச்சியான பதக்கங்கள் பெறுவதும், தொடர் வெற்றிகளைப் பெறுவதும்தான் உங்களுக்கும் பெருமை. தமிழ்நாட்டுக்கும் பெருமை. ஏன் இந்தியாவிற்கே பெருமை!

எந்தவொரு அரசாக இருந்தாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஒரு சில துறைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தும். ஆனால் திராவிட மாடல் அரசு, அனைத்துத் துறைகளிலும் அதிகக் கவனம் செலுத்தி, அனைத்துத் துறைகளையும் ஒருசேர வளர்த்து வந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சில துறைகள் ஸ்டார் துறைகளாக வளர்ந்து வருகின்றன. அதில் விளையாட்டுத் துறையும் ஒன்று.

இந்தத் துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்த துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத் துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது.

நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

# கலைஞனுக்கு அழுத்தம் வழங்கக் கூடாது: காவிரி போராட்டம் குறித்து சரத்குமார் கருத்து

கர்நாடகாவைப் போன்று தமிழகத்தில் நடிகர்கள் போராடுவதில்லையே என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள நடிகர் சரத்குமார், நடிகர்கள்தான் எல்லாவற்றையும் தீர்த்து வைக்க வேண்டியதில்லை. கலைஞனுக்கு அழுத்தம் தரக்கூடாது என தெரிவசித்துள்ளார்.

இது தொடர்பாக திருச்சியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த நடிகர் சரத்குமார், தமிழகத்தில் விவசாய சாகுபடிக்கு நீர்வரத்து தேவை. உச்ச நீதிமன்ற உத்தரவு இருந்தும் கர்நாடக மாநிலம் தண்ணீர் தராமல் இழுத்தடிக்கிறது. அங்கே சாதகமான அரசு இருந்தாலும் தண்ணீர் தருவதாக



இல்லை. ஒரு நாட்டுக்குள் இந்தப் பிரச்சினையை ஏன் தீர்க்க முடியவில்லை என்பதுதான் கேள்வி. இதில் மத்திய அரசு தலையீட்டு தீர்வை ஏற்படுத்தி தர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அவரிடம், ‘காவிரி பிரச்சினையில் கர்நாடகாவில் நடிகர்கள் ஒன்றிணைந்து போராடுகிறார்கள். தமிழகத்தில் அப்படியான சூழல் இல்லையே?’ என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், நடிகர்கள்தான் எல்லாவற்றையும் தீர்க்க வேண்டியதில்லை. இது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு. இன்று ‘பான் இந்தியா’ திரைப்படங்கள் உருவாகி எல்லா துறையினரும் கலந்து நடிக்கிறார்கள்.

கலைஞனுக்கு அழுத்தம் தரக்கூடாது என நினைப்பவன் நான். மிகப் பெரிய அளவில் பிரச்சினை ஏற்பட்டு, நீதிமன்றம், மத்திய அரசு கைவிட்டு சூழல் பெரிதாகும்போது வேண்டுமானால் உரிமைக்காக அனைவரும் ஒன்றிணைந்து போராடுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# காசா மீது 6 நாள்களில் 6 ஆயிரம் குண்டுகள் வீச்சு!

## இடைவிடாமல் தாக்குவோமென இஸ்ரேல் எச்சரிக்கை



ஹமாஸை கட்டுப்படுத்தும் விதமாக காசாவில் 6 நாட்களில் 6 ஆயிரம் குண்டுகள் வீசப்பட்டுள்ளன என இஸ்ரேலிய விமானப் படை தெரிவித்துள்ளது. மேலும், இடைவிடாமல் தாக்குவோம் எனவும் ஹமாஸை இஸ்ரேல் விமானப் படை எச்சரித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலுக்கு எதிராக இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்காவின் ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேல் சென்றுள்ளார். அவர், இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார்.

தொடர்ந்து தலைநகர் டெல் அவிவ் நகரில் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் செய்தியாளர்களை சந்தித்த பிளிங்கன், நான் இங்கு அமெரிக்க அமைச்சராக மட்டுமல்ல, பிளிங்கன் என்ற ஒரு யூதனாகவும் உங்கள் முன் வந்திருக்கிறேன். இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல்கள் நாஜி படுகொலைகளின் எதிரொலிப்பு போல் உள்ளது. இஸ்ரேலுடன் அமெரிக்கா என்றென்றும் நிற்கும் என்று தெரிவித் துள்ளார்.

தொடர்ந்து இஸ்ரேலியர்கள் மத்தியில் பேசிய பிளிங்கன், உங்களைத் தற்காத்துக் கொள்ளும் அளவுக்கான வலிமை உங்களிடம் இருக்கலாம். ஆனால், அமெரிக்கா இருக்கும் வரை, நீங்கள் ஒருபோதும் அதை செய்ய வேண்டிய தேவை இருக்காது. ஏனென்றால் நாங்கள் எப்போதும் உங்களுடன் இருப்போம்.

அமைதியையும் நீதியையும் விரும்பும் எவரும் ஹமாஸின் பயங்கரவாதங்களை கண்டிக்க வேண்டும். பாலஸ்தீனியர்களின் விருப்பங்கள் நியாயமானவை. ஆனால், ஹமாஸ் பாலஸ்தீனிய மக்களையும், சுதந்திரம் மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான அவர்களின் நியாயமான விருப்பங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சரை அடுத்து பென்டகன் தலைவரும் தற்போது இஸ்ரேலுக்கு சென்றுள்ளார்.

ஹமாஸை கட்டுப்படுத்தும் விதமாக காசாவில் 6 ஆயிரம் குண்டுகள் வீசப்பட்டுள்ளன என இஸ்ரேலிய விமானப்படை தெரிவித்துள்ளது.

டசின் கணக்கான போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் காசா பகுதி முழுவதும் ஹமாஸ் அமைப்பின் இலக்குகளைத் தாக்கியுள்ளன. 3 ஆயிரத்து 600 ஹமாஸ் இலக்குகளை தாக்கியுள்ளன. இதனால் நூற்றுக்கணக்கான ஹமாஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஆயுத தளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் வரை நாங்கள் இடைவிடாமல் எங்கள் தாக்குதலை தொடர்வோம் என இஸ்ரேலிய விமானப்படை தனது அதிகாரப்பூர்வ சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை ஆயிரத்து 417 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் அரைவாசி பேர் குழந்தைகள் மற்றும் பெண்கள். 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்கு கடற்கரையில் 31 பேர் உயிரிழந்துள்ளனர். அதேநேரம், ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்து 300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்து 200 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் தொடங்கி 6 நாட்கள் ஆகியுள்ளது. இந்த நிலையில், தாக்குதல் காரணமாக காசாவுக்கு மின்சாரம், தண்ணீர், எரிபொருள் ஆகியவற்றின் விநியோகத்தை இஸ்ரேல் நிறுத்தியுள்ளது. இதனால், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் அடிப்படைத் தேவைகள் இன்றி கடும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளார்கள்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு ஹமாஸ் ஆதரவாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதற்கு தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதில் அளித்துள்ள இஸ்ரேல் எரிசக்தித் துறை அமைச்சர், ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளனர். அவர்களை விடுவித்தால் மட்டுமே காசாவுக்கு மனிதாபிமான உதவிகளை நாங்கள் வழங்குவோம். அவர்கள் தரப்பில் மனிதாபிமானம் காட்டினால்தான் பதிலுக்கு நாங்கள் எங்கள் மனிதாபிமானத்தைக் காட்டுவோம். அதுவரை காசாவுக்கு மின்சாரமோ, குடிநீரோ, எரிபொருளோ வழங்க மாட்டோம். எங்களுக்கு யாரும் போதனை செய்யத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவ தாக்குதல் தீவிரம் அடைந்துள்ள நிலையில், ஹமாஸ் தீவிரவாதிகள் விடுத்துள்ள மிரட்டல் செய்தியில், எச்சரிக்கை விடுக்காமல், காசா பகுதியில் இஸ்ரேல் விமானப்படை குண்டு வீசுகிறது. இஸ்ரேல் வீசும் ஒவ்வொரு குண்டுக்கும், இஸ்ரேல் பிணைக் கைதி ஒருவரை கொல்வோம் என கூறியுள்ளது. இஸ்ரேல் மக்கள் 150 பேரை பணய கைதிகளாக பிடித்து வைத்துள்ளோம் என ஹமாஸ் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.



# ஆஸியையும் பந்தாடியது தெ.ஆபிரிக்கா

உலகக்கிண்ணக்கிரிக்கெட்தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றுள்ளது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் தென்னாபிரிக்க – அவுஸ்திரேலிய அணிகள் களம் கண்டன.

இரு அணிகளுக்கும் இது இரண்டாவது லீக் ஆட்டமாகும்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கு டி கொக் (109) அடித்த சதம், ஐடென் மார்க்ராமின் (56) அரைச்சதம் மற்றும் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்பான ஆட்டமும் கைகொடுத்தது.

இறுதியில் தென்னாபிரிக்கா 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 311 ஓட்டங்களைக் குவித்தது.

அவுஸ்திரேலியா சார்பாக சிறப்பாகப் பந்துவீசிய மிச்செல் ஸ்ராக், கிளைன் மெக்ஸ்வெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் 312 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவின் பந்துவீச்சுத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

இறுதியில் 40.5 ஓவர்களை எதிர்கொண்டு, 177 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதனடிப்படையில் தென்னாபிரிக்க அணி 134 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சார்பாகத் துடுப்பாட்டத்தில் ஆகக்கூடுதலாக மார்னஸ் 46 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபடா 3 விக்கெட்டுகளையும், மார்கோ ஜன்சென், கேஷவ் மஹராஜ், டப்ரைஸ் ஷம்சி ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். எஞ்சிய ஒரு விக்கெட்டை லுங்கி நெய்டி வழித்தெடுத்தார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக தென்னாபிரிக்காவின் டி கொக் தெரிவானார்.

தென்னாபிரிக்காவுக்கு இது இரண்டாவது வெற்றியாகும். அதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கு இரண்டாவது தோல்வியாகும்.

இந்த ஆட்டத்திலும் வெற்றிபெற்ற தன் மூலம் தென்னாபிரிக்க அணி, மொத்தம் 4 புள்ளிகளைப் பெற்று முதலிடத்துக்கு முன்னேறியது.

அவுஸ்திரேலியா எந்தவொரு புள்ளியையும் பெறாமல் ஒன்பதாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.



**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.360 |
| 02 | நியுஸிலாந்து | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.958 |
| 03 | இந்தியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.500 |
| 04 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.927 |
| 05 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.553 |
| 06 | பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.653 |
| 07 | இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.161 |
| 08 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |
| 09 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.846 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.907 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி



# மளவாளன்பட்ட முறிப்புக் கிராமத்தில் கிணறு புதிதாக அமைத்து கையளிப்பு

(சண்முகம் தவசீலன்)

மளவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் நிதி பங்களிப்பில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஒழுங்குபடுத்தலோடு கிணறு அமைத்து பொதுமக்களின் பாவனைக்கு நேற்று முன்தினம் கையளித்தது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மளவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் 40 அடி ஆழம் கொண்ட கிணற்றின் பெயர்ப்பலகையை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் (Forum) இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) சி.குணபாலன் கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மணவாளன்பட்ட கிராம அலுவலர் த.தனபால்ராஜ், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


இந்தப் பிரதேசத்தில் வறட்சி காலத்தில் தண்ணீர் வற்றும் நிலை காணப்படுவதனால் அதனை நிவர்த்தி செய்ய குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்திருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையினை சீர்செய்யும் நோக்கில் இந்த குடிதண்ணீர் திட்டம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# கல்முனை விடயத்தை விட்டுக் கொடுப்பதற்கு சுமந்திரனுடன் நிஸாம் காரியப்பர் இணக்கம்?

## கல்முனையில் இருந்து காட்டமான அறிக்கை

(நூருல் ஹுதா உமர்)

"இப்போதைய தலைவர் ஊடாக பெரிய பதவியை அடைய வேண்டும் என்பதற்காக பெருந்தலைவர் அஷ்ரபை கலங்கப்படுத்த வேண்டியது யாருக்கும் தேவையில்லை. தேவையானவர்கள் பதவிகளை எப்படியாவது யாரை காக்காய் பிடித்தாவது பெற்று கொள்ளலாம். முஸ்லிங்களின் உரிமைக்காக குரல் எழுப்ப முடியாத – தாய் மண்ணுக்கு ஆதரவாக செயற்பட முடியாத – சுமந்திரன் போன்றவர்கள் கேட்கும் வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்க்க முடியாத – நிஸாம் காரியப்பர் போன்றவர்கள் தலைவர் அஷ்ரபை கொச்சைப் படுத்துவத்தை வன்மையாக கண்டிக்கிறேன்" – என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக உயர்பீட உறுப்பினரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.சி.ஏ. சத்தார் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், ஜனாதிபதி சட்டதரணியுமான நிஸாம் காரியப்பர் தனியார் ஊடகமென்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியில் பல விடயங்களை தெரிவித்திருந்தார். அதில் முக்கியமாக கல்முனை விடயத்தில் மோசமான கருத்துக்களை கூறியமையுடன் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பிரதித் தலைவருமான எச்.எம். எம்.ஹரீஸ் மரணிக்கும் வரை இந்தப் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது என்றும், இந்தப் பிரச்சினையை ஹரீஸ் எம்.பிதான் உருவாக்கினார் என்பது போலவும், அந்தப் பிரச்சினையை தீர்க்க ஹரீஸ் எம்.பிதான் தடையாக இருப்பது போலவும் விதண்டாவாதக் கருத்துக்களை கூறி மக்களையும், யதார்த்தங்களையும் குழப்பி அடித்துள்ளார். அவரது இந்தச் செவ்வியில் வெளியான பல கருத்துக்கள் மன வேதனை தருவனவாக அமைந்துள்ளன.

முஸ்லிங்கள் பெரும்பான்மையாக வாழும் சகோதரர் நிஸாம் காரியப்பாரின் தாய் மண்ணான கல்முனையை துண்டாட 1989 களில் தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுத குழுக்களும், அதன் பின்னர் வந்த மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களும் செய்த சதி வேலைகளைப் பற்றி சகோதரர் நிஸாம் காரியப்பார் எப்போதும் வாய்திறப்பதில்லை.



குறிப்பாக முஸ்லிங்களின் நகர், வஜார், காணி, வர்த்தக நிலையங்கள், பெறுமதியான சொத்துக்களை கல்முனை உப பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்வாங்கி முஸ்லிங்களுக்கு எதிராக தமிழ் அரசியல் தலைவர்களும், சில அதிகாரிகளும் செய்த அநியாயங்களுக்கும், துரோகத்துக்கும் நியாயம் கேட்டு அவர்களுக்கு எதிராக இதுவரையில் சகோதரர் நிஸாம் காரியப்பர் ஒரு வார்த்தையேனும் இதுவரை வாய் திறக்காமல் இருப்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அரசியல் ரீதியாக பல தடவைகள் தமிழ் தலைமைகள் இந்த நகரத்தைக் கையகப்படுத்த எடுத்த முயற்சிகளின் போது அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க சகோதரர் நிஸாம் காரியப்பர் போன்றவர்கள் முன்வராத காலகட்டத்தில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தனியாக நின்று போராடி தமிழ் தலைவர்களின் அரசியல் ரீதியான சதியை முறியடித்தார்.

தமிழ்த் தலைவர்களில் ஒருவரான சுமந்திரனின் கல்முனை உப பிரதேச செயலக வழக்கில் அவரை எதிர்த்து எதிர்கொள்ள சகோதரர் நிஸாம் காரியப்பாரை ஊர் முக்கியஸ்தர்கள் கேட்டுக் கொண்ட போது தனது தாய் மண் ஆபத்தின் விளிம்பில் இருந்த போதும் கூட, சுமந்திரனை எதிர்த்து நீதிமன்றம் செல்லாது ஊர் பிரமுகர்களின் கோரிக்கையை மறுத்தமை மட்டுமல்லாமல், கல்முனை முஸ்லிம்களின் சொத்துக்களை கையகப்படுத்த முயலும் சுமந்திரனின் செயற்பாடுகளை ஒரு சந்தர்ப்பத்திலேனும் கண்டிக்காதவர். கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இருக்கத்தக்கதாக 2018 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளரான இவர், சுமந்திரன் ஆகியோர் உட்பட பலரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது, முஸ்லிங்களுக்கு நியாயம் வழங்க முன்வராதவர்கள் யார் என்பது சகோதரர் நிஸாம் காரியப்பருக்கு நன்றாக தெரியும்.

ஒருமாதமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமந்திரன் அடங்கலாக தமிழ் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டு முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்க மறுத்த விடயத்தை சகோதரர் நிஸாம் காரியப்பர் தெரிந்து கொண்டும் பல வழக்குகளில் சகோதரர் நிஸாம் காரியப்பருடன் சுமந்திரன் ஒன்றித்து நிற்பதால் அவர்களை நியாயவாதிகளாகக் காட்டமுனைகிறார்.

பல வழக்குகளில் நிஸாம் காரியப்பரும், சுமந்திரனும் ஒருமித்து வாதாடுவதால் இவர்களுக்கிடையில் ஒரு உடன்பாடு இருப்பது போன்ற சந்தேகம் எங்களுக்கு எழுகிறது. கல்முனை விடயத்தை சுமந்திரனுக்கு விட்டுக்கொடுக்க இணக்கம் காணப்பட்டதோ என்ற சந்தேகம் இப்போது பேசுபொருளாக உள்ளது. இவைகளுக்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் கூறியுள்ள கருத்துக்களை வன்மையாக கண்டிக்கிறேன்.

இதேபோன்று 20 ஆம் திருத்தச் சட்டமூல வாக்கெடுப்பில் கட்சி முடிவை மீறி எம்.பிக்கள் வாக்காளித்தனர் எனவும், துரோகிகள் என்றும் கூறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் 03 வருடங்களின் பின்னர் கட்சியினதும், தலைவரினதும் அனுமதியுடந்தான் எம். பிக்கள் வாக்களித்தனர் என ஒப்புக் கொள்கிறார். அவ்வாறு அபாண்டங்களை கூறிவரும் நிஸாம் காரியப்பர், இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீமை விட பெருந்தலைவர் அஷ்ரப் சாணக்கியம் குறைந்த, கெட்டித்தனம் குறைந்தவர் என்ற கருத்தை முன்வைத்து மறைந்த பெருந்தலைவர் எம். எச்.எம்.அஷ்ரபை தரம் தாழ்த்தி, கொச்சைப்படுத்தி பேசி எங்களை மிகவும் வேதனைக்குட்படுத்தியுள்ளார். பெருந்தலைவரின் ஆளுமை, சாதனை, திறமைகளை நாட்டின் முக்கிய பல அரசியல் தலைவர்கள் சிலாகித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது, தலைவர் அஷ்ரபை கொச்சைப்படுத்திப் பேசிய முதல் அரசியல்வாதி நிஸாம் காரியப்பர்தான். – என்று தெரிவித்துள்ளார்.



# மலையகத்தில் தொடர்ச்சியாக மழை

# மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

பொகவந்தலாவ பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையினால் கெசல்கமுவ ஓயாவின் கிளை ஆறுகள் பெருக்கெடுத்துப் பாடசாலைகள் மற்றும் பல தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பொகவந்தலாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் பெய்த கடும் மழையின் காரணமாக, பொகவந்தலாவ சென்மேரிஸ் தேசிய பாடசாலைக்குச் சொந்தமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையோடு, வகுப்பறைகளிலும் நீர் நிரம்பி நிற்கின்றமையைக் காணக்கூடியதாக இருந்தது.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாக பெய்த கடும் மழை காரணமாக பல தேயிலைத் தோட்டங்களுக்குச் செல்லும் வீதிகளும் மழைநீரில் மூழ்கியுள்ளன.

அத்தோடு, நோர்டன் பிரிட்ஜ் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முதல் நீர் தேக்க பகுதிகளில் நீர் வெளியேற்றப்படவில்லை. தொடர் மழை பெய்யும் பட்சத்தில் நீர் வெளியேறும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

கனமழை காரணமாக ஹட்டன் – நுவரெலியா, ஹட்டன் – கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன எனவும், எனவே, அவ்வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது கவனமாக வாகனங்களைச் செலுத்துமாறும் பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மாலை வேளையில் நோட்டன், மஸ்கெலியா, ஹட்டன் பொலிஸ் பிரிவுகளில் உள்ள அனைத்து வீதிகள் வழியாக செல்லும் அனைத்து வாகன சாரதிகளும் பனி மூட்டம் அதிகம் காணப்படுவதால் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும் என ஹட்டன் வலயப் போக்குவரத்துப் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. அத்துடன் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்து வருகிறது. ஏனைய நீர் தேக்கங்கள் நிரம்பிய நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.





# வடக்கு நிலைமை குறித்து பிரிட்டிஷ் எம்.பி. திருப்தி!

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்துத் தாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறார் எனப் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ்/டன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது. வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவ- தற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் பென்னி மோர்டௌண்டிற்கு ஆளுநர் விளக்கமளித்தார்.



வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பென்னி மோர்டான்ட் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்கும் கலந்துகொண்டார்.

# மஸ்கெலியா சாமிமலையில் வெள்ளத்தில் மூழ்கிய ஆலயம்

**(செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஒல்டன் தோட்ட பத்தாம் நம்பர் பிரிவில் உள்ள விநாயகர் ஆலயம் மற்றும் குடியிருப்பு பகுதியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்கள்.

நேற்று முன்தினம் மாலை சாமிமலை பகுதியில் பெய்த கன மழையால் மீட்டியா கோட்டை வன பகுதியில் உள்ள காட்டாறு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக மாலை 6 மணிக்கு மேல் சாமிமலை பத்தாம் நம்பர் பிரிவில் உள்ள விநாயகர் ஆலயம் மற்றும் குடியிருப்பு பகுதியில் வெள்ளம் புகுந்தது.

இதன் காரணமாக அங்கு குடி இருந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் வீட்டை விட்டு வெளியேறி உறவினர் இல்லங்களில் தற்காலிகமாகத் தங்கினர்.

நேற்று காலை வேளையில் காட்டாறில் வெள்ளம் குறைந்தால் மீண்டும் அனைவரும் தங்களது குடியிருப்புகளுக்கு வந்து உள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆலயத்தின் உள்ளே இருந்த பொருள்கள் அனைத்தையும் வெள்ளம் அடித்துச் சென்று உள்ளது.

# 200 ஆண்டுகள் பழமை மரத்தின் ஒரு பகுதி முறிந்து சரிந்துள்ளது

## மட்டக்களப்பு நகரில் சம்பவம்



(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு நகர் ஜாமிஉஸ் ஸலாம் ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு முன்பாக உள்ள 200 வருடங்கள் பழமை வாய்ந்த மரத்தின் ஒரு பகுதி முறிந்துள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இந்த மரத்தின் ஒரு பகுதி பாரிய வெடிப்புச் சத்தத்துடன் முறிந்து மரத்துடன் சாய்ந்துள்ளது.

பள்ளி வாயலுக்குள் தொழுகையில் ஈடுபட்டவர்களுக்கு இந்த மரம் வெடித்து முறிந்த சப்தம் கேட்டுள்ளது.

விடயத்தைக் கேள்வியுற்ற மட்டக்களப்பு மாநகர சபையின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு பொறுப்பதிகாரி பிரதீபன்(பாபு) தலைமையிலான குழுவினர் விரைந்து அந்த மரத்தின் அருகே யாரும் சொல்லாதவாறு அடையாளப்படுத்தினர்.

இதையடுத்து நேற்று வியாழக்கிழமை அந்த இடத்துக்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் தலைமையிலான அதிகாரிகள். மட்டக்களப்பு மாநகர சபை அதிகாரிகள், வன வளத்திணைக்கள அதிகாரிகள் மரத்தை பார்வையிட்டமையுடன் ஜாமிஉஸ் ஸலாம் பள்ளி வாயல் நிருவாக சபை தலைவர் சியாம் ஹாஜியார் தலைமையிலான நிர்வாகிகளுடன் கலந்துரையாடினர்.

முறிந்து சாய்ந்துள்ள குறித்த மரத்தின் பகுதியை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# கென்யோன் நீர் தேக்கத்தின் இரு வான் கதவுகளும் திறப்பு

(செ.தி.பெருமாள்)

நேற்று மாலை 3.45 மணிக்கு ஹப்புகஸ்தனை பகுதியில் அமைந்துள்ள கென்யோன் நீர் தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டும் 3 அங்குலம் திறந்து விட பட்டு உள்ளது என கென்யோன் நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த சில நாள்களாக இப்பகுதியில் பெய்து வரும் கன மழையால் முடிந்த அளவு நீர் மின் உற்பத்தியை மேற் கொண்ட பின்னர் சுரங்கப் பாதைகள் வழியாக நீர் லக்சபான நீர் மின் நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டது.

நேற்று பிற்பகல் வேளை முதல் அதிக மழை பெய்து வருவதால் அதிகளவில் நீர் வரத்து உள்ளது.

மேலதிக நீரையே வெளியேற்றி வருகிறோம். கரையோரப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும்ம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். – எனக் கோரிக்கை விடுத்தார்.

# அமெரிக்க ஆணையாளர் - கிழக்கு ஆளுநர் சந்திப்பு!



(ஹஸ்பர்)

அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்துக்கான ஆணையாளர் டேவிட் கெரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக நேற்றுமுன்தினம் (11) சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் சமய நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தூதுவர் ஸ்டீபன் ஸ்னெக், தூதுவர் ஜேமி ஸ்டாலி, கண்காணிப்பு கொள்கை ஆலோசகர் செமா ஹசன், கொள்கை ஆய்வாளர் ரூபி உட்சைட், அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரி ஷந்தீப் குரூஸ், அமெரிக்கா கொழும்பு தூதரகத்தின் அரசியல் நிபுணர் ஆகியோர் உடனிருந்தனர்.

# கசிப்புடன் நால்வர் கைது!



(த.சுபேசன்)

யாழ்ப்பாணம், மல்லாகம் மற்றும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களங்களின் கூட்டு சுற்றிவளைப்பில் தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் மூவரும் மட்டுவில் பகுதியில் ஒருவருமாக மொத்தமாக நால்வர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம், மல்லாகம் மற்றும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் இணைந்து தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

3500 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர், 4600மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர், 3200மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர் , 1500மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு நிரப்ப வைத்திருந்த 16 வெற்றுப் போத்தல்களுடன் ஒருவர் என நால்வர் கைது செய்யப்பட்டனர்.

நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதில் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு மாகாண உதவி மதுவரி ஆணையாளர் சுனில்சாந்த, மதுவரி அத்தியட்சகர் பெரேரா ஆகியோரின் தலைமையில் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# ஞாயிறன்று புலமைப்பரிசில் பரீட்சை; பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தடை!



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளைமறுதினம் 15ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 888 பரீட்சை மத்திய நிலையங்களில் தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதன்படி, பரீட்சை நிறைவடையும் வரை பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.10.2023




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவுகளை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பனியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -13.10.2023




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPARK JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park